## செய்திக் குறிப்பு
## வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம்

படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் 5 ஆண்டுகளுக்குள் மேலாக காத்திருக்கும் இளைஞர்களின் துயரினை துடைக்கும் வகையில், மாதம் ஒன்றுக்கு எஸ்.எஸ்.எல்.சி/ பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.150/ ப்ளஸ் டூ (+2) / மேனிலைக் கல்வியில் தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு ரூ. 200/- மற்றும் பட்டதாரி/ முதுநிலை பட்டதாரிகளுக்கு ரூ.300/ வீதம் மூன்றாண்டு காலத்திற்கு வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கும் திட்டம் 11.11.2006 அன்று துவக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் தற்பொழுது 31.12.2011 உடன் முடிவடைந்த காலாண்டிற்கு பயன் பெறும் காலம் 01.01.2012 முதல் 31.03.2012 வரை மேற்கண்ட கல்வித் தகுதிகளை வேலைவாய்ப்பகத்தில் (31.12.2006) க்கு முன் பதிவு செய்து ஐந்தாண்டு காலம் முடிவுற்ற பதிவுதாரர்கள் உரிய விண்ணப்பங்களை, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இலவசமாக பெற்று பூர்த்தி செய்து தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

31.12.2011 ஆம் தேதியின் நிலவரப்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதுக்கு மிகாமலும், ஏனையோரை பொறுத்த மட்டில் 40 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

மனுதாரர் குடும்ப வருமானம் ஆண்டு வருமானம் ரூ.50000/- க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

மனுதாரர் பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பைத் தமிழ் நாட்டிலேயே முடித்திருக்க வேண்டும் அல்லது அவரது பெற்றோர்களில் ஒருவர் அல்லது பாதுகாவலர் அல்லது கணவர் அல்லது மனைவி குறைந்த பட்சம் 15 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வசித்து வந்திருக்க வேண்டும்.

மனுதாரர் அரசு அல்லது தனியார் நிறுவனங்களின் வாயிலாக எந்தவிதமான நிதி உதவித் தொகையும் பெறுபவராக இருத்தல் கூடாது.

மனுதாரர் அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்கு செல்லும் மாணவ, மாணவியராக இருத்தல் கூடாது. இந்நிபந்தனை தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல் வழிக் கல்வி கற்கும் மனுதாரர்களுக்கு பொருந்தாது.

மேலும் மனுதாரர் உதவித் தொகை பெறும் காலங்களில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினைத் தொடர்ந்து புதுப்பித்து வருபவராக இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட தகுதியுடையவர்கள் உடனடியாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரை நேரில் சந்தித்து அனைத்து அசல் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டையுடன் காலை 10 மணி முதல் மாலை 5 மணி முடிய அலுவலக நாட்களில் (சனி, ஞாயிறு தவிர) தொடர்பு கொள்ளும்படி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் தெரிவிக்கிறார்.

மேலும், ஏற்கனவே உதவித் தொகை பெறும் பயனாளிகள் அனைவரும் சுய உறுதிமொழி ஆவணம் அளித்து ஓராண்டு முடிவுற்றவர்கள் மீண்டும் சுய உறுதிமொழி ஆவணம் உரிய இணைப்புகளுடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.

சுய உறுதிமொழி ஆவணம் கொடுத்தவர்களுக்கு மட்டும் தொடர்ச்சியாக உதவித் தொகை வழங்கப்படும் என்றும், இதுவரை சுய உறுதிமொழி ஆவணம் கொடுக்காத நபர்கள், உடனடியாக வேலைவாய்ப்பகத்தில் உரிய படிவத்தில் சுய உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்கும்படி மாவட்ட ஆட்சியர் குமரகுருபரன் இ.அ.ப அவர்கள் தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
நாமக்கல்.

அனுப்புநர்

திரு.நா.ஞானசேகரன், எம்.ஏ.,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
நாமக்கல்.

பெறுநர்

மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்,
நாமக்கல்.

<u>வே.உ.டி1/ 35 /2011 நாள் 04.12.2011</u>

பொருள் : படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் – பதிவு செய்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்குதல்– தொடர்பாக.

*********

படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் 5 ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருக்கும் இளைஞர்கள், மற்றும் ஒன்பதாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இவர்களுக்கு உதவித்தொகை பெற விண்ணப்பம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இச்செய்தியினை அனைத்து செய்திதாள்களிலும் இலவசமாக வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு- செய்திக்குறிப்பு

தங்கள் உண்மையுள்ள

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
நாமக்கல்.

## <u>செய்திக்குறிப்பு</u>

### <u>வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டத்தின் சிறப்பு முகாம்</u>

படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் 5 ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருக்கும் இளைஞர்களின் துயரினை துடைக்கும் வகையில், மாதம் ஒன்றுக்கு எஸ்.எஸ்.எல்.சி/பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.150/ ப்ளஸ் டூ (+2)/மேனிலைக் கல்வியில் தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு ரூ.200/ மற்றும் பட்டதாரி/முதுநிலை பட்டதாரிகளுக்கு ரூ 300/ வீதம் மூன்றாண்டு காலத்திற்கு வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற கீழ்கண்ட தகுதியுடையவர்கள் வரும் 16.11.2011 அன்று நடைபெறும் சிறப்பு முகாமிற்கு வரவேற்கப்படுகிறார்கள்

இத்திட்டத்தின் கீழ் தற்பொழுது தங்களது கல்வித் தகுதிகளை வேலைவாய்ப்பகத்தில் (30.09.2006) க்கு முன் பதிவு செய்து ஐந்தாண்டு காலம் முடிவுற்ற பதிவுதாரர்கள் உரிய விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

30.9.2011 ஆம் தேதியின் நிலவரப்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதுக்கு மிகாமலும், ஏனையோரை பொறுத்த மட்டில் 40 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

மனுதாரரின் குடும்ப வருமானம் ஆண்டு வருமானம் ரூ.50000/ க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

மனுதாரர் பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பைத் தமிழ் நாட்டிலேயே முடித்திருக்க வேண்டும் அல்லது அவரது பெற்றோர்களில் ஒருவர் அல்லது பாதுகாவலர் அல்லது கணவர் அல்லது மனைவி குறைந்த பட்சம் 15 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வசித்து வந்திருக்க வேண்டும்.

மனுதாரர் அரசு அல்லது தனியார் நிறுவனங்களின் வாயிலாக எந்தவிதமான நிதி உதவித் தொகையும் பெறுபவராக இருத்தல் கூடாது.

மனுதாரர் அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்கு செல்லும் மாணவ, மாணவியராக (Regular Student) இருத்தல் கூடாது. இந்நிபந்தனை தொலைதூரக்கல்வி அல்லது அஞ்சல் வழி கல்வி கற்கும் மனுதாரர்களுக்கு பொருந்தாது.

மேலும் மனுதாரர் உதவித் தொகை பெறும் காலங்களில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினைத் தொடர்ந்து புதுப்பித்து வருபவராக இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட தகுதியுடையவர்களும் மற்றும் இதுவரை சுய உறுதிமொழி ஆவணம் கொடுக்காத நபர்களும் வரும் 16.11.2011 புதன்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் வேலூர் கந்தசாமி கண்டர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற உள்ள சிறப்பு முகாமில் கலந்துக் கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.நா. ஞானசேகரன் அவர்கள் தெரிவிக்கிறார்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்
நாமக்கல்.

**<u>தமிழ்நாடு அரசு ::: தேசிய வேலைவாய்ப்புப் பணி</u>**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.நா.ஞானசேகரன், எம்.ஏ.,<br>மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,<br>மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,<br>நாமக்கல். | மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்,<br>நாமக்கல். |

**<u>வே.உ.டி1/6091/2011 நாள் 11.11.2011</u>**

பொருள் : படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் – பதிவு செய்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்ட சிறப்பு முகாம் –தொடர்பாக.

*********

படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் 5 ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருக்கும் இளைஞர்கள், மற்றும் ஒன்பதாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இவர்களுக்கு உதவித்தொகை விண்ணப்பம் பெறுவதற்கான சிறப்பு முகாம் 16.11.2011 புதன்கிழமை அன்று வேலூர் கந்தசாமி கண்டர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறுவது குறித்த செய்தியினை அனைத்து செய்திதாள்களிலும் இலவசமாக வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு- செய்திக்குறிப்பு

தங்கள் உண்மையுள்ள

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
நாமக்கல்.